## **Sub Court, Eraniel**

O.S. No.55/2024
Date: 02.03.2026.
PW1 - திருமதி. விஜயகுமாரி

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

1 மற்றும் 2ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணைத் தொடர்ச்சி

நான் இந்த வழக்கில் 3 பட்டிகை சொத்துக்களை குறிப்பிட்டிருக்கிறேன் என்றால், சரிதான். 3 பட்டிகை சொத்திற்கும் தெற்கு பக்கம் வழிப்பாதை என்றால், சரியல்ல. எனது பூர்வீக சொத்தான 138/3A வின் தெற்குப்பக்கம் எனது வீட்டுமனை வழிப்பாதை உள்ளது. அந்த வழிப்பாதை எதன் தொடர்ச்சியாக அமைந்துள்ளது என்றால், எனது வீட்டில் இருந்து கோவில் வரை உள்ள எங்களது குடும்ப சொத்துக்களின் வழிப்பாதையின் தொடர்ச்சி. எங்கள் வீட்டில் இருந்து கோவில் வரையில் 9 வீடுகள் உள்ளன. நான் குறிப்பிடும் 9 வீடுகளும் அந்த வழிப்பாதையின் வடக்கும் தெற்குமாக அமைந்துள்ளன. எனது வீட்டிற்கு 4 சக்கர வாகனங்கள் வருவதற்கு வழியில்லை என்றாலும், என் வீட்டிற்கு மேற்குப் பக்கத்தில் உள்ள வீடுகள் வரையிலும் 4 சக்கர வாகனங்கள் வருவதற்கு வழி உண்டு என்றாலும், சரியல்ல. ஆட்டோ மட்டும் வரும். அந்த சாலை கோவில் முதல் எங்கள் வீட்டிற்கு முன்பு வரை பஞ்சாயத்து சிமெண்ட் ரோடு அமைந்துள்ளது என்றால், எனது வீட்டிற்கு மேற்கில் உள்ள பங்கிராஜின் வீடு வரை அவ்வாறு பஞ்சாயத்து ரோடு உள்ளது. பங்கிராஜ் எனது கணவரின் உடன் பிறந்த அண்ணன் ஆவார். வழக்கில் A பட்டிகை சொத்தின் ரீசர்வே எண்.138/3A என்றால், சரிதான். இந்த சொத்திற்கு தெற்கு பக்கத்தில் வழிப்பதை உள்ளதாக நான் சொல்லியிருப்பது, அது எனது வீட்டு மனை வழிப்பாதை. 2ம் பிரதிவாதி வின்செண்ட் வீட்டிற்கு செல்வதற்கு இந்த கோவிலில் இருந்து செல்லும் வழிப்பாதை தான் வழி என்றால், சரியல்ல. அது எங்கள் குடும்ப சொத்து. வின்செண்டின் வீடு வடக்குப் பக்கம் பார்த்து உள்ளது என்றாலும், அவருடைய வீட்டின் பிரதான வழிப்பாதை தெற்கு பக்கத்தில் தான் உள்ளது என்றால், அவருக்கு வீட்டிற்கு தெற்கில் வழிப்பாதை உள்ளது என்றால், அவருக்கு 2 வீடுகள் இரண்டு வீடுகளுக்கும் தெற்குப் பக்கத்தில் வழிப்பாதை உள்ளது. வின்செண்ட் வீட்டிற்கு வடக்குப்பக்கத்தில் முன்னால் உள்ள வழிப்பாதை 138/8 என்றால், எனக்கு வீட்டிற்கு வர வழி கிடையாது என்றால், சரிதான். கோவிலில் இருந்து கிழக்கு நோக்கி வரும் வழி என்னுடைய வீட்டுடன் முடிந்து விடுகிறது. அதற்கு கிழக்கே தான், 139/1 என்ற பிரதிவாதியின் சொத்து உள்ளது என்றால், சரிதான். புல எண். 139/1ல் எனது கணவர் கிரயம் பெற்றுள்ள சொத்து அந்த புல எண்ணின் மேற்கு அற்றத்தில்

உள்ளது என்றால், சரிதான். புல எண்.139/1 ன் விஸ்தீரணம் 20 ஏர் ஆகும். அந்த புல எண்ணில் 1ம் பிரதிவாதிக்கு 7.500 சென்ட் உள்ளது என்றால், மோசடியாக எழுதி வாங்கியிருக்கிறார்கள். நான் வாங்கிய 2.500 சென்ட் சொத்தினை ஞானப்பிராகசத்திடம் இருந்து கிரயம் வாங்கியதில் மோசடி எதுவும் இல்லை. எங்கள் வழக்கு A மற்றும் B பட்டிகை சொத்துக்கள் ஒரே கிடப்பாக உள்ளது என்றால், சரிதான். வழக்கின் C பட்டிகை சொத்து என்பது A மற்றும் B பட்டிகை சொத்தின் பகுதி என்றால், சரிதான். வழக்கு C பட்டிகை சொத்திற்கு கிழ மேலாக வழி இருப்பதாக நான் குறிப்பிட்டு உள்ளது, சரியல்ல. தற்போது 139/1ல் ஞானப்பிராகசத்திற்கு எந்த சொத்தும் இல்லை என்றால், சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்த போதும் அவருக்கு அங்கு சொத்து இல்லை என்றால், சரிதான். A பட்டிகை சொத்தைப் பொறுத்து நான் தாக்கல் செய்துள்ள பாகப்பிரிவினை பத்திரத்திற்கு தாய் பத்திரத்தை தாக்கல் செய்ய முடியாது. அது பழைய ஆவணம் என்பதால் பொடிந்து விட்டது. அவ்வாறு எனக்கு ரசீது கொடுத்து இருக்கிறார்கள். எனது கணவரும் அவருடைய சகோதரரும் பாகம் ஏற்படுத்திக் கொண்டுள்ள சொத்திற்கு இணையான சொத்து, அவர்களுடைய சித்தப்பா குருசுமுத்துவிற்கு கொடுக்கப்பட்டு உள்ளது. அந்த ஆவணத்தை பற்றிய விபரம் எனக்கு தெரியாது. குருசுமுத்துவிற்கு 3 ஆண்கள் மற்றும் 3 பெண் மக்கள் உண்டு. குருசுமுத்துவின் சொத்து, எங்கள் 138/3A விற்கு மேற்கு பக்கத்தில் உள்ளது. அவர்களுக்கு அந்த புல எண்ணில் 6.500 சென்ட்கள் தான் உள்ளன என்றாலும், அதனை அவர்கள் அமைதியாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்றாலும், ஆனால் நாங்கள் 6.500 சென்டிற்கு பதிலாக 7 சென்ட்கள் என்று பாகம் பிரித்து, அதன்படி 3.500 சென்ட்கள் எங்கள் கைவசம் இருப்பதாக மோசடியாக ஆவணம் தயாரித்து இந்த வழக்கில் தாக்கல் செய்திருக்கிறேன் என்றால், சரியல்ல. இந்த வழக்கில் நான் கேட்டுள்ள முதல் பரிகாரம் எங்களுடைய சொத்து எங்களுக்கு வேண்டுமென்றும், பிரதிவாதிகள் கூட்டாக தயார் செய்த போலி பத்திரத்தை இரத்து செய்ய வேண்டுமென்றும் கேட்டு இருக்கிறோம். இரத்து செய்ய வேண்டும் என்று கேட்கும் பத்திரம், பிரதிவாதிகள் பஞ்சாயத்திற்கு எழுதிக் கொடுத்த தானப்பத்திரம் என்றால், சரிதான். அந்த ஆவணத்தை நான் படித்து பார்த்திருக்கிறேன். அதில் கூறப்பட்டுள்ள எல்கை விபரங்கள் சரியானவை அல்ல. அவர்கள் எழுதிக் கொடுத்த அந்த ஆவணத்தில் எனது புல எண்.138/3A குறிப்பிடப்பட்டுள்ளது. பழையப்புல எண்.4538 என்று குறிப்பிட்டுள்ளார்கள். வழக்கில் A மற்றும் B பட்டிகை சொத்தின் கிழக்கே சுமார் 15 வீடுகள் இருக்கும். அந்த 15 வீட்டுக்காரர்களும்

கோவிலுக்கு செல்ல வேண்டும் என்றால், எங்கள் வீட்டிற்கு தெற்கு பக்கத்தில் உள்ள கிழ மேல் பாதையில் தான் செல்ல வேண்டும் என்றால், சரியல்ல. அவர்களுக்கு வேறு 3 வழிப்பாதைகள் உள்ளன. 1ம் பிரதிவாதியின் சொத்திற்கு கிழக்கு பக்கம் லாரி செல்ல வழி உள்ளது என்றால், சரியல்ல. நான் குறிப்பிடுவது போல வழக்கு C பட்டிகை சொத்து என்று ஒன்று இல்லை என்றால், சரிதான். பிரதிவாதிகள் அவர்களின் சொத்து உள்ள புல எண்ணில், அவர்களுக்கு பாத்தியப்பட்ட இடத்தை, பொது நலன் கருதி பஞ்சாயத்திற்கு தானப்பத்திரம் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள் என்றால், சரியல்ல. நான் இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பு, காவல் துறையிலும், வருவாய் துறையிலும், நில அபகரிப்பு மத்திய குற்ற பிரிவிலும் தனித்தனியாக மனுக்கள் கொடுத்திருக்கிறேன் என்றால், சரிதான். அவற்றில் உரிய பரிகாரம் எனக்கு கிடைக்காததால் உயர்நீதிமன்றத்தில் Writt மனு தாக்கல் செய்தேன். உயர்நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட உத்தரவானது பிரதிவாதிகள் மீது குற்ற வழக்கு பதிவு செய்ய வேண்டுமென்ற அறிவுறுத்தலாகும். ஆனால் இன்று வரையில் பிரதிவாதிகள் மீது எந்த குற்ற வழக்கும் பதிவு செய்யவில்லை. அதில் இருந்து தப்புவதற்கு தான் OS.No.31/2015 தாக்கல் செய்திருக்கிறார்கள். உயர்நீதிமன்ற உத்தரவின்படி நில அபகரிப்பு, வருவாய்த்துறை மற்றும் காவல் துறை விசாரணைகளில் நாங்கள் இரு தரப்பும் ஆஜராகினோம் என்றால், சரிதான். இரு தரப்பிலும் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டன என்றால், சரிதான். அந்த விசாரணைகளில் பிரதிவாதிகள் மீது தவறு எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை என்றால், சரியல்ல. பிரதிவாதிகள் அவர்களது உரிமையை பாதுகாக்க OS.No.31/2015 தாக்கல் செய்தார்கள் என்றால், சரியல்ல. அந்த வழக்கு இந்த நீதிமன்றத்தில் OS.No.58/2024 என்றால், சரிதான். அந்த வழக்கில் சரியான பரிகாரம் தேடிக் கொள்வதற்கு பதிலாக பிரதிவாதிகளை கஷ்டப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்துடன் நான் இந்த வழக்கில் உண்மைக்கு புறம்பாக தாக்கல் செய்திருக்கிறேன் என்றால், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.